DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 145/2023

| | | |
|---|---|---|
| | Prosecution PW 3 | |
| Deposition of Witness for | Defence | |
| | Court | |

| | | |
|---|---|---|
| Name | : | கமலீஸ்வரி |
| Father's Name | : | மகேஸ்வரன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 21.04.2025

**1 ம் ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் புலியூர் குருவிபாளையத்தில் குடியிருந்து EEE முடித்து விட்டு தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். நாராயணன் என் தாத்தா ஆவார். ஆஜர் எதிரி மற்றும் ஆஜரில்லாத எதிரியை எனக்கு தெரியும். கடந்த 27.8.2020ம் தேதி மதியம் சுமார் 3.00 மணியளவில் ஆஜா எதிரி மற்றும் ஆஜரில்லாத எதிரி என் தாத்தாவுக்கு சொந்தமான தென்னந்தோப்பில் தீ வைத்தது தெரிந்து என் தாத்தா நாராயணன் தென்னந்தோப்பு சென்று ஆஜர் எதிரியிடம் எதற்கு தீ வைக்கிறாய் என்று கேட்டார். ஆஜர் எதிரி நிலம் தன்னுடையது என்று கூறினார்.

**(Sd)S.P.** பரத்குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

அதற்கு என் தாத்தா அது தன்னுடைய இடம் என்று கூறினார். ஆஜர் எதிரி சர்மிளா என் தாத்தாவை இடது கன்னத்தில் கையால் அடித்தார். மேலும், கெட்ட வார்த்தையால் திட்டினார். நான் வெளியே வந்து பார்த்தேன். சர்மிளா என் தாத்தாவை கீழே தள்ளிவிட்டார். அவர் மகள் 2 ம் எதிரி என் தாத்தாவை பிடித்துக் கொள்ள ஆஜர் எதிரி அருகிலிருந்த ரீப்பர் கட்டையால் என் தாத்தாவை தொடை மற்றும் முதுகில் அடித்தார். ஆஜர் எதிரி ரீப்பர் கட்டையை கையில் வைத்துக்கொண்டு என்னைக்கிருந்தாலும் உன் சாவு என் கையில் என சொல்லி மிரட்டினார். நான் என் தாத்தாவை தூக்கினேன். பின்னர் வீட்டிற்கு சென்று போன் மூலம் சம்பவம் குறித்து என் அண்ணன் வினோத்திற்கு தகவல் சொன்னேன். ஆஜர் எதிரி மற்றும் ஆஜர் இல்லாத எதிரி இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்று விட்டனர். பின் என் அண்ணன் உதவியுடன் என் தாத்தாவை அரசு மருத்துவமனைக்கு என் அண்ணன் அழைத்து சென்றார். சம்பவம் பற்றி போலீசார் என்னை 28.8.2020 ம் தேதி என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

நான் ஒரு டான்சர் என்றால் சரிதான். விழாக்களுக்கு அழைத்தால் நான் நடனமாட செல்வேன் என்றால் சரியல்ல, நான் தற்போது இல்லத்தரசியாக உள்ளேன். போலீசாரிடம் நான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடமானது என் தாத்தா நாராயணன் என்பவர் குத்தகைக்கு எடுத்து அனுபவித்து வரும் இடம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இதுசம்பந்தமாக 1 ம் எதிரிக்கும், என் தாத்தா நாராயணனுக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். மேலும் என் தாத்தா பிரச்சனை சம்பந்தமாக போலீசில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். சம்பவ இடத்தினை 1 ம் எதிரி விலைக்கு வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி என் தாத்தா குடியிருக்கும் வீட்டிற்கு அடிக்கடி சென்று வருவேன் என்றால் சரிதான். 2020 ம் வருடம் நான் படித்துக் கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல, படித்து முடித்துவிட்டேன். நிலம் சம்பந்தமான பிரச்சனையில் நான் போலீசாரிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக எப்போது காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றேன் என்றால் போலீசார் என்னிடம் போனில்தான் விசாரித்தார்கள். நேரில் செல்லவில்லை. நான் வெளிநாட்டில் இருந்தேன்.

**(Sd)S.P.** பரத்குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தினை நான் நேரில்தான் வழங்கினேன். 2020ம் ஆண்டு போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்த நாளில் மதியம் 3.00 மணியளவில் என் தாத்தா வீட்டில் வைத்து விசாரித்தார்கள். அ.சா.1 வினோத் என்பவர் எனது அண்ணன் ஆவார். நான்தான் என் அண்ணன் வினோத்துக்கு போன் செய்து சொன்னேன் என்றால் சரிதான். எனக்கு சம்பவம் குறித்து எதுவுமே தெரியாது என்றாலும், என் தாத்தா மற்றும் அவர் மகன்கள் சொல்லிக்கொடுத்து நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**(Sd)S.P.** பரத்குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**